# சுபீட்சத்தின் 6 ஆவது இதழ்

## இன்று 04 ஆம் திகதி முதல்...



### மாகாண சபை தேர்தலில் திருமலை தேறுமா?

பொன் ஆனந்தம்

### கிழக்கின் மீட்பர்களும், கல்முனை வடக்குப் பிரதேச செயலகமும்





## என்னவாம்? நம்மட கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம்

### மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனிடம் சில கேள்விகள்







இ.பாக்கியராசா

### முந்தனை ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி திட்டம்







### கிரான்குளம் வெள்ளரிப் பழச் செய்கைக்கு

உந்து சக்தியளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்

# ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவை மூன்று பிரிவுகளாக பிரிப்பதற்கு சிபாரிசு

வியாழேந்திரன், சந்திரகாந்தன், சாணக்கியன், கருணாகரம் இணைந்து நடவடிக்கை


# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

விலை 20/=

பிரதிகளுக்கு முந்துங்கள்...

(பத்திரிகை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 04.05.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கிழக்கு தேர்தலில் தமிழ்- முஸ்லிம் கட்சிகள் கூட்டாக இணைய முஸ்தீபு

## பேச்சுக்கள் ஆரம்பம்



(ராஜ்)

கிழக்கு மாகாண சபை தேர்தலை தமிழ்முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து சந்திப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# திருமலையில் 1517 பேருக்கு கொரோனா; 12 மரணங்கள் பதிவு



( அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் ஆயிரத்து 517 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் 12 மரணங்கள் பதிவாகியுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார

02 ஆம் பக்கத்தில்...

# மட்டு மாவட்டத்தில் நேற்றும் 28 பேருக்கு கோவிட் தோற்று



(வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 28 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு 11 , செங்கலடி08, வாழைச்சேனை07, ஓட்டமாவடி01, களுவாஞ்சிக்குடி 01 என பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# மட்டு.வில் நேற்று 13 பேருக்கு கோரோனா




(படுவான்பாலகன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 13 கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மயூரன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# கல்முனை பிரதேச செயலக விவகாரம் சமல்- வியாழேந்திரன் சந்திப்பு



கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவது தொடர்பாக அமைச்சர் சமல் ராஜபக்ஸவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மற்றும் சமல் ராஜபக்ஸவிற்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த

02 ஆம் பக்கத்தில்...

# திருமலை பிரதான தபால் நிலையம் மூடப்பட்டது

(பொன்ஆனந்தன்)

திருகோணமலையில் கொரோனாவின் தீவிரம் அதிகரிக்கும் நிலையில்,பிரதான தபாற்கந்தோர் மூடப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# கிண்ணியாவில் தொடர்ந்து அதிகரித்து வரும் கொரோனா: அதிர்ச்சியில் சுகாதாரப் பிரிவினர்!!

(எப்.முபாரக்)

கிண்ணியா சுகாதார பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேலும் 12 பேர் கொரோனா

02 ஆம் பக்கத்தில்...









## கல்முனையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை

# இறுக்கமாக அமுல்படுத்த ஏற்பாடு மீறுவோரைக் கைது செய்ய நடவடிக்கை



( அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மிக இறுக்கமாகவும் துரிதமாகவும் அமுல்படுத்துவதற்கு மாநகர கொவிட்19 தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது.

கொரோனா கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கு

02 ஆம் பக்கத்தில்...






# றிஷாட்டை விடுவிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை காட்ட வேண்டும்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீனை விடுவிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை காட்ட வேண்டும் என மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் காங்கிரஸின்

02 ஆம் பக்கத்தில்...









## அவசரமென்றால்

# 1906 ஐ அழையுங்கள்

(காந்தன்)

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு அழைத்து செல்வதற்காக

02 ஆம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரமென்றால் 1906 ஐ அழையுங்கள்

புதிய தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கொரோனா தொற்றாளர்கள் எவரேனும் தமது வீடுகளில் இருப்பார்களாயின் அது குறித்து 1906 என்ற இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்குமாறு, இராணுவத் தளபதி ஷவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் வைத்தியசாலைகள் அல்லது தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதால், இந்த தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்கள் குறித்து சுகாதார அதிகாரிகளை தொடர்பு கொள்ள முடியாத போது இந்த தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்த முடியும்.

அத்துடன், குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளும்போது வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும் என்றும் இராணுவத்தளபதி சவேந்திரசில்வா குறிப்பிட்டுள்ளார்.

## கல்முனை பிரதேச செயலக விவகாரம்

பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டிய நியாயத்தை எடுத்து கூறியுள்ளதுடன், தேவையான ஆவணங்களையும் எழுத்து மூலம் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியழேந்திரன் சமர்ப்பித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்ட அமைச்சர். இது குறித்து தான் கவனம் செலுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுக்கு தெரிவித்துள்ளார்.










## றிஷாட்டை விடுவிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை

திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் நேற்று(03)மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில்

றிசாத் அவர்களின் கைது இந்த நாட்டில் வாழ்கின்ற எமக்கு மட்டுமல்ல உலக முஸ்லிம் சமூகத்தினரையும் களங்கப்படுத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வதாக இருந்தால் சபாநாயகர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் இப்படியாக புனித ரமழான் காலத்தில் நடுநிசியில் கைதாவது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது அரசின் உயர்மட்டத்தில் இருக்கும் ஜனாதிபதி பிரதம மந்திரி பாதுகாப்பு அமைச்சர் இது விடயத்தில் கவனம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும் குற்றங்கள் ஏதும் இருப்பின் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்துங்கள் .பல முறை ஜனாதிபதி ஆணைக்குழு அவரையும் அவரது சகோதரரையும் விசாரணை செய்துள்ளது அவர்களினால் சாட்சியங்கள் வழங்கப்பட்டுள்ளது எந்தவித குற்றமுமற்றவர் என்றிருந்த போது அநியாயக் கைது இடம் பெற்றுள்ளது. சிறுபான்மை சமூகம் நிம்மதியாக வாழ வேண்டும் எமது சமூகம் ஒரு போதும் பயங்கரவாதத்துக்கு துணை போனதும் கிடையாது முன்னால் ஜனாதிபதி முன்னால் பாதுகாப்பு செயலாளர் என றிசாட் ஒரு நல்ல நேர்மையான மனிதன் என நற்சான்றும் வழங்கியுள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தை பழிவாங்க நினைக்க வேண்டாம் வீண் பழி சுமத்துவதை விட்டு விட்டு அப்பட்டமான கைதுகளை நிறுத்துங்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதன் தலைவர் இனவாத கட்சியல்ல எல்லோருக்கும் பொதுவானதும் பொதுவான தலைவருமே இந்த கட்சி என்றார்.

## கிண்ணியாவில் தொடர்ந்து அதிகரித்து வரும் கொரோனா:

தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:

22 பேருக்கு மேற்கொள்ளபட்ட அன்டிஜென் பரிசோதனையில் இந்த 12 நபர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அத்தோடு இதில் 11 நபர்கள் பெரிய கிண்ணியா கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்தவர்களாகும். இதில் ஜாவா வீதியைச் சேர்ந்த மூவரும் பெருந் தெருவைச் சேர்ந்த நால்வரும் மத்திய கல்லூரி வீதியைச் (பிரதானவீதி) நால்வரும் அடங்குகின்றனர்.

இவ்வாறு அதிகமான தொற்றாளர்கள் ஒரே கிராம சேவகர் பிரிவு என்பதாலும் ஒரே நேரத்தில் 22 பேருக்கு மேற்கொள்ளபட்ட பரிசோதனையில் 12 நபர்கள் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டிருப்பதும் அவதானத்துக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாக இருக்கிறது. மேலும் மாஞ்சோலைச் சேனை கிராம சேவகர் பிரிவு ஆலிம் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

எனவே கிண்ணியா சுகாதாரப் பிரிவு மக்கள் இது குறித்து விழிப்படைய வேண்டும். மாவட்டத்தின் 9 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலை கிண்ணியாவுக்கு ஏற்படாத அளவுக்கு பாதுகாக்கும் பொறுப்பு பொது மக்களின் கைகளிலே இருக்கின்றது. நோன்பு பெருநாளை வீட்டில் இருந்தே கொண்டாடப் போகின்றோம். இதனால் தங்களது பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு கடைத் தெருக்களுக்கு செல்வதை முற்றாக தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த மாவட்டதில் உள்ள பெரும்பாலான பிரதேசங்களில் உள்ள கடைத் தெருக்கள் மூடப்பட்டுள்ளதால் அந்த பிரதேசங்களில் இருந்து ஆடை கொள்வனவிற்காக அதிகமான மக்கள் கிண்ணியாவுக்கு வருகை தருகின்றனர். இதையும் இப்பிரதேச மக்கள் கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

மேலும் எழுமாறாக 16 பேரின் மாதிரிகள் பெறப்பட்டு, பி சி ஆர் பரிசோதனைக்காக மட்டக்களப்பு கொரோனா மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## திருமலை பிரதான தபால் நிலையம் மூடப்பட்டது

திருமலை பிரதான தபாற் கந்தோரில் பணியாற்றும் ஒன்பது பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து தபால் நிலையம் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு மாவட்டத்தில் நேற்றும் 28 பேருக்கு கொவிட் தொற்று

தொற்றுக்குள்ளானவர்களில் 11 ஆண்களும், 07 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

மாவட்டத்தில் 10 பேர் மரணமடைந்துள்ளதுடன், தற்போது 160 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன் இதுவரை மாவட்டத்தில் 1145 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை இறுக்கமாக

ஒத்துழையாமல், பொது இடங்களில் சுகாதார நடைமுறைகளை அலட்சியம் செய்வோரைக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் அச்செயலணி தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர கொவிட்19 தடுப்பு செயலணிக் கூட்டம் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மாலை, முதல்வர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன், பிராந்திய கட்டளைத் தளபதி பிரிகேடியர் சானக விஜயரட்ன, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் என்.ரமேஷ், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளான டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, டொக்டர் ஆர்.கணேஸ்வரன், டொக்டர் எம்.எம்.அல்அமீன் றிஷாட் உட்பட பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டில் கொரோனா தொற்று மூன்றாவது அலை தீவிரமாக உருவெடுத்து வருகின்ற சூழ்நிலையில் கல்முனை மாநகர பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து இதன்போது தீவிரமாக ஆராயப்பட்டது.

தற்போது றமழான் நோன்புப் பெருநாள் வியாபாரம் களைக்கட்டியுள்ள நிலையில் புடவைக் கடைகளில் சனநெரிசலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அங்கு சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாக அமுல்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

அவ்வாறே பொதுச் சந்தைகள், கடைத் தெருக்களில் சமூக இடைவெளிகளை பேணச் செய்வதிலும் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட அனைத்து சுகாதார நடைமுறைகளையும் இறுக்கமாக அமுல்படுத்துவதெனவும் இதற்கு வர்த்தகர் சங்கங்கள் முழுமையாக ஒத்துழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் பள்ளிவாசல்களில் தொழுகைக்காக வருவோர் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கான ஒழுங்குகளை பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்துகளை கட்டுப்படுத்தல், கண்காணித்தல், கொழும்பு போன்ற தூர இடங்களுக்கான பயணங்களில் ஈடுபடுகின்ற பஸ்களினதும் பயணிகளினதும் விபரங்களை அன்றாடம் சேகரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

தேவையின்றி வீதிகளில் நடமாடுவோர், குறிப்பாக அங்கும் இங்குமாக கூடி நிற்கின்ற, வீதிகளில் சுற்றித்திரிகின்ற இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களுக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு கல்முனை மாநகர சபை எல்லையினுள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாநகர சபை, சுகாதாரத் துறை, பொலிஸ், இராணுவம், பிரதேச செயலகங்கள், வர்த்தக சங்கங்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கூட்டுப்பொறுப்புடன் ஒன்றிணைந்து முன்னெடுப்பது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## மட்டு.வில் நேற்று 13 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் நேற்று மேலும் ஐந்து கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் அன்டிஜன் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட கூழாவடி பகுதியில் நேற்று அன்டிஜன் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

திசவீரசிங்கம் சதுக்கம் பகுதியில் 11கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்து நேற்று காலை அப்பகுதியை சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் சந்தேக நபர்களாக இனங்காணப்பட்டவர்கள் அன்டிஜன் சோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர். இதனடிப்படையில் கூழாவடி பகுதியில் 120பேருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அவர்களில் ஐந்து பேர் கோவிட் தொற்றுக்குள்ளானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 13பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில் இதில் இருவர் வெளியிடங்களை சேர்ந்தவர்கள் எனவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாம் கட்ட கோவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாகவும் இதுவரையில் 1350பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில் 1517 பேருக்கு கொரோனா; 12 மரணங்கள் பதிவு

சேவைகள் பணிப்பாளர் டி. ஜீ.எம். கொஸ்தா தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு 9 மணியளவில் தொலைபேசி உரையாடலின் போது அவர் இதனை தெரிவித்தார். இதனடிப்படையில் கடந்த 2 ஆம் திகதி வரை ஆயிரத்து 517 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் 401 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும்,506 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் முதலாம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் 34 பேருக்கும், இரண்டாம் திகதி 42 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதுவரைக்கும் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 641 பேர் இனம் காணப்பட்டுள்ளதாகவும், உப்புவெளி பிரதேசத்தில் 382 பேரும் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதியில் 156 பேரும் குச்சவெளி பிரதேசத்தில் 49 பேரும், குறிஞ்சாங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 38 பேரும் மூதூர் பிரதேசத்தில் 99 பேரும், சேருவில பிரதேசத்தில் 18 பேரும் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் ஒருவரும், கந்தளாயில் 73 பேரும் தம்பலகாமத்தில் 25 பேரும் கோமரங்கடவல பிரதேசத்தில் 27 பேரும் பதவிசிறிபுர பகுதியில் 8 பேரும் இனங் காணப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி ஜீ. எம்.கொஸ்தா தெரிவித்தார்.

## கிழக்கு தேர்தலில் தமிழ்- முஸ்லிம் கட்சிகள் கூட்டாக

மாகாண சபை தேர்தலை அரசாங்கம் நடத்தும் பட்சத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை கைப்பற்றும்.அதில் நாங்கள் திடமான நம்பிக்கையை கொண்டிருக்கிறோம்.தமிழ் மக்கள் மாத்திரமல்ல,தமிழ் பேசுகின்ற முஸ்லிம் மக்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது பாரிய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள்.ஆகையால்,இந்த விடயம் சம்பந்தமாக முஸ்லிம் கட்சி தலைவர்களுடனும் நாங்கள் பேசியிருக்கிறோம்.தமிழ் பேசும் மக்களாக நாங்கள் ஒன்றிணைந்து கிழக்கு மாகாணமும் தமிழ் பேசும் மாகாணம் என்ற அடையாளத்தை பேணும் வகையில் கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை கைப்பற்றுவோம் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்,கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்முஸ்லிம் தரப்புகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது சம்பந்தமாக ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொது செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை தமிழ் பேசும் மக்கள் கைப்பற்றவேண்டிய தேவை இருப்பதனால் தமிழ்முஸ்லிம் சக்திகள் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்வது தொடர்பிலான பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளதாகவும்,இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்த நிசாம் காரியப்பர்,இந்த விடயத்தை சாதகமாக பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.



மருத்துவ காப்புறுதி



வாகனக் காப்புறுதி



குழந்தைகளுக்கான காப்புறுதி



ஆயுட் காப்புறுதி



சட்டக் காப்புறுதி

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923

n.uthayakumar1981@gmail.com

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்

10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரியம் கூடிய கொரோனா வைரஸ் பரவலிலிருந்து நம்மை நாமே பாதுகாப்போம் – சுகாதார வைத்திய அதிகாரி பரூஸா நக்பர்

(ஏ.எல்.எம்.சலீம்)

வீரியம் கூடிய கொரோனா வைரஸ் பரவல் இன்று நாட்டில் பெரும் சவாலாக உருவாகியுள்ளது. எனவே இதற்கான சுகாதார வழிகாட்டுதல்கள், கட்டுப்பாடுகளை கண்டிப்புடன் பின்பற்றி நம்மை நாமே பாதுகாக்க வேண்டும். பிழையான கண்ணோட்டத்துடன் நாம் செயற்படக்கூடாது.

இவ்வாறு, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். பரூஸா நக்பர் கூறினார்.

நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கான, கொரோனா வைரஸ் மூன்றாம் அலை கட்டுப்படுத்தல் செயலணியின் அவசரக் கூட்டம், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்தில், நிந்தவூர் பிரதேச செயலாளர். ரி.எம்.எம். அன்ஸார், நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். சஹீலா ராணி இஸடீன், பள்ளி வாசல்கள் நம்பிக்கையாளர் சபைத்தலைவர் எஸ்.எம்.பி.பாறூக் இப்றாகீம், பிரதேச சபைச் செயலாளர் திருமதி. திலகா பரமேஸ்வரன் உட்பட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், படைத்தரப்பினர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். பரூஸா நக்பர் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

நமது அண்டை நாடான இந்தியாவில் பெரும் அவலங்களை ஏற்படுத்தி கொரோனா வைரஸ் பரவல் கோரத்தாண்டவமாடி வருகின்றது.

இந்நிலையில் நமது நாட்டிலும் வீரியம் கொண்ட கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாம் அலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த வைரஸ் பரவல் எமது பிரதேசங்களையும் ஆக்கிரமிக்காது முன்கூட்டியே பாதுகாப்பு வழிமுறைகளை நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

முதலில் நம்மை நாமே இத்தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன், பிரதேசத்தையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும்.

எமது நலனுக்காக விடுக்கப்படும் இந்த தீவிர கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துதவற்கான சுகாதார வழிமுறை அறிவுறுத்தல்கள், கட்டுப்பாடுகளை, உண்மை நிலை மறந்து பிழையான கண்ணோட்டத்தில் எவரும் நோக்கக்கூடாது.

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் பிறப்பிக்கப்படும் சட்ட திட்டங்கள், பொதுவான வழிமுறைகளை நாமும் பின்பற்றி நல்லிணக்கத்துடன் வாழ்வதுடன், அவற்றுக்கான ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

அந்த வகையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படும் சுகாதார



வழிமுறைகள், கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவதில் நாம் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். பிழையான எண்ணக்கருக்களுடன் அவற்றைத்திசைதிருப்பக் கூடாது.

மேலும், இந்த விடயத்தில் சுகாதாரத்திணைக்கத்தின் பங்களிப்புமட்டுமிருந்து இக்கொடியவைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது. முக்கியமாக பொது மக்கள் இந்த அபாய நிலை உணர்ந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

சமூகத்தைப் பாதுகாக்கும் இச் செயற்திட்டங்கள், வழிமுறைகள், தன்னிலைக்கட்டுப்பாடுகள் தொடர்பில் சமூகத்தலைவர்கள், மதப் பொரியாளர்கள், பள்ளிவாசல் நிருவாகிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கவும் முன்வர வேண்டும் என்றார்.

கொரோனா வைரஸ் பரவலை பிரதேசத்தில் கட்டுப்படுத்துவதற்கு முன்னோடியான பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# கல்முனை சந்தாங்கேணி மைதான உள்ளக விளையாட்டு தொகுதி நிர்மாணம் ஆரம்பம்



(நூருல் ஹுதா உமர்)

170 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் கல்முனை மாநகர சந்தாங்கேணி விளையாட்டு மைதான பாரிய அளவிலான உள்ளக விளையாட்டு தொகுதி அமைப்பதற்கான வேலைகள் இன்று ஆரம்பமானது. இது தொடர்பில் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் விளையாட்டு அமைச்சின் பொறியியல் பிரிவின் பணிப்பாளரை சந்தித்து கலந்துரையாடி இந்த வேலைத்திட்டத்தின் இறுதிக்கட்ட தீர்மானத்தை எட்டினார்.

இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க கட்டிட நிர்மாண வேலைகளை செய்யும் ஒப்பந்த நிறுவனத்திற்கு அதற்கான பணிப்புக்களையும், ஆவணங்களையும் விளையாட்டு அமைச்சு வழங்கியிருந்த நிலையில் குறித்த நிறுவனம் இவ்வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட நகர்வாக setting out செய்யும் பணிகளை முன்னெடுத்திருந்தது. இதன் அடுத்த கட்டமாக கட்டுமான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் கடந்த காலங்களில் விளையாட்டுத்துறை பிரதியமைச்சராக இருந்த போது இந்த சந்தாங்கேணி மைதானத்தை தேசிய மைதானமாக மாற்றுதல் மற்றும் கல்முனை மாநகர சந்தாங்கேணி விளையாட்டு மைதான பாரிய அளவிலான உள்ளக விளையாட்டு தொகுதியமைத்தல் போன்றவற்றை முன்னெடுத்து வந்திருந்தார். இதன் வெளிப்பாடாகவே இந்த அபிவிருத்திப்பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 129 ஆவது ஜனன தின நிகழ்வு

(கல்லடி நிருபர்)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 129 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நேற்று மட்டக்களப்பில் இரு வேறு இடங்களில் அனுஸ்டிக்கப்பட்டது.

அதனடிப்படையில் கல்லடி - உப்போடை மணிமண்டப வளாகத்தில் அமைந்துள்ள சுவாமியின் சமாதியில் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினரின் ஒழுங்கமைப்பில் பிரதான ஜனன தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை தலைவர் க.பாஸ்கரன், செயலாளர் ச.ஜெயராஜா உள்ளிட்ட மட்டுப்படுத்தப்பட்டளவிலானோர் கலந்து கொண்டனர்.

அடிகளாரது சமாதிக்கு மலர் மாலை அணிவித்து, பூக்கள் தூவி, வெள்ளை நிற மல்லிகையோ பாடல் பாடி ஜனனதின நிகழ்வுகள் சுகாதார முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டது.

அதேவேளை மட்டக்களப்பு மாநகரசபை ஏற்பாடு செய்திருந்த சுவாமி விபுலானந்த அடிகளாரின் நிகழ்வு சுவாமியின் உருவச் சிலை அமைந்துள்ள நீரூற்றுப் பூங்கா வளாகத்தில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிக்கப்பட்டு, பூக்கள் தூவி, வெள்ளை நிற மல்லிகையோ பாடல்



பாடி ஜனனதின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மாநகர சபை ஆணையாளர் மா.தயாபரன் தலைமையில் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் இந்நிகழ்வுகளில் மாநகர உறுப்பினர்கள், மாநகர பிரதி ஆணையாளர் மற்றும் மாநகர உத்தியோகத்தர்கள் ஊழியர்கலென மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதார வழிமுறைகளை பிற்பற்றும் பொருட்டு நிகழ்வுகள் வெவ்வேறு நேரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினரின் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்டத்தில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் ஆரம்பம்

(வடமலை ராஜ்குமார்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மக்களை கொரோனா தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அகம் மனிதாபிமான வள நிலையம் அமைப்பானது, திருகோணமலை மாவட்டச் செயலகம் மற்றும் திருகோணமலை பிராந்திய சுகாதார திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரத்தினை தற்போது மேற்



கொண்டு வருகின்றனர்.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரமானது திருகோணமலை பட்டினமும் சூழலும், தம்பலகாமம், மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

# திருமலை இராஜவரோதயம் வீதியில் உள்ள வீட்டில் 1.6 மில்லியன் பெறுமதியான நகைகள் கொள்ளை

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை இராஜவரோதயம் வீதியில் உள்ள வீட்டில் புகுந்து சுமார் 1.6மில்லியன் பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1 மணிக்கும் 2 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வீட்டிலுள்ளவர்கள் உறக்கத்திலிருந்த வேளையில் கதவை உடைத்து உள்நுழைந்தவர்களினால் இத்துணிகர திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிசாருக்கு முறையிட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் அப்பகுதியிலுள்ள கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளை கண்டறிய தீவிர தேடுதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

திருட்டு போன தங்க ஆபரணங்களில் தனது மனைவியின் தாலிகொடி மற்றும் மகளின் தங்க வளயல்களின் பெறுமதி மட்டுமே 16 1/2 பவுன்கள் என வீட்டின் உரிமையாளர் விசாரணை யின்போதுகூறியுள்ளார்.

இதே வேளை அயலிலுள்ள மற்றுமொரு வீட்டிலும் திருட முயற்சித்ததாகவும் விசாரணை களில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# அனுராதபுரத்திற்கான புதிய உதவித் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்றார்



(முஹம்மட் ஹாசில்)

அனுராதபுர மாவட்ட உதவித் தேர்தல் ஆணையராக திரு. கே. முகுந்தன் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

முன்னதாக அனுராதபுர மாவட்ட உதவித் தேர்தல் ஆணையராக பணியாற்றிய திரு. எம்.பி.எம். சுபியான் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று செல்வதால் இந்த பதவியை பெறுவதற்கு திரு. முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அனுராதபுரத் தேர்தல் அலுவலகத்தில் திறமையான அதிகாரிகள் பலர் இருப்பதைக் கேள்விப்பட்டதாகவும், அவர்களுடன் தனது பணியைச் சிறப்பாகச் செய்வார் என்று நம்புவதாகவும் கூறினார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இந்திய அரசுக்கு வழங்கக்கூடிய அழுத்தங்கள் ஈழ தமிழ் மக்களுக்கு உறுதுணையாக இருக்குமென நம்புகின்றோம்'



நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, ஆறாவது தடவையாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் அதன் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைத்திட அறிவுபூர்வாக செயற்பட்டு அடித்தளமிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான தங்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்று அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மாணவனாக கோபாலபுரத்தில் சமூகப் பணிகளை ஆரம்பித்து, எண்பதாம் ஆண்டுகளில் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக செயற்பட்ட காலம் தொட்டு கழகத்தின் வளர்ச்சியில், தங்கள் அயராத உழைப்பின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மாபெரும் திராவிட இயக்கத்தினது மட்டுமல்லாது தமிழகத்தினதும் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் உன்னதமான கடமையினை காலம் இன்று தங்களுக்கு ஒப்படைத்திருப்பதை மகிழ்வுடன் காண்கின்றோம். அந்தக் கடமையில் தாங்கள் வெற்றி பெறவேண்டுமெனவும் வாழ்த்துகிறோம்.

தங்கள் தந்தையாரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் அவர்களுடன் எமது மறைந்த தலைவர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்கள் மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். அதனை நீங்களும் அறிவீர்கள். எங்களுடைய இயக்கத்துடன் தங்கள் தந்தை கொண்டிருந்த நெருக்கம் காரணமாக நானும் கலைஞர் அவர்களை பல தடவைகள் சந்தித்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி அவருடைய அறிவுரைகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

குறிப்பாக, இந்திய தரப்புகளின் அனுசரனையுடன் திம்பு பேச்சுவார்த்தை உள்ளிட்ட பல பேச்சுவார்த்தைகள் இலங்கை அரசுடன் நடைபெற்ற சந்தர்ப்பங்களில் அந்த சந்திப்புக்களுக்கு செல்வதற்கு முன்பதாக கலைஞரிடம் சென்று கலந்துரையாடிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலைஞருடன் கூடவே நீங்களும் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை மிகுந்த அக்கறையுடனும் அனுதாபத்துடனும் அணுகியிருந்ததை நான் உணரத் தவறவில்லை. அந்த உணர்வுடனும் ஆதரவுடனுமே உங்கள் நிலைப்பாடு இன்றுவரை தொடர்கிறது என்பதை நம்புகின்றோம்.

தற்போதைய நெருக்கடியான நிலையிலே, இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக, மாபெரும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதற் குடிமகனாகவும் இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய நியாயபூர்வமான அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு மிக அவசியமான தேவையாக இருப்பது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவ் அழுத்தங்கள் உறுதுணையாக அமையுமெனவும் நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் துயர் துடைக்க தன்னால் இயன்றளவும் பணியாற்றிய கலைஞரின் வழிநின்று செயலாற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் தலைவரான தாங்களும் எமது மக்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களில் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் செழுமையாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கு முழுமையான அர்ப்பணிப்புடனான பங்களிப்பை எதிர்காலத்திலும் வழங்க வேண்டுமென உரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்.

# மு.க.ஸ்டாலினுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்து

(க.கிஷாந்தன்)



தமிழக சட்ட மன்ற தேர்தலில் பத்து வருடங்களுக்கு பின்பு அதிகபடியான தொகுதிகளில் வெற்றிக்கொண்டு, தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்கவிருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் சார்பிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளை பின்தள்ளி தி.மு.க அமோக வெற்றிப்பெற்றுள்ளது.

இந்த நிலையில் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்து இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே ஜீவன் தொண்டமான் இதனை தெரிவித்துள்ளார்.

திமுக தலைவர் மு.க ஸ்டாலினின் வெற்றி இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினரின் வாழ்வில் சுபிட்சத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் சௌமிய மூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்தே இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும், திமுகவுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

அதற்கமைய எனது தந்தை ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்கு திமுக தலைவர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்ததை நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

ஆகவே கடந்த காலங்களில் திமுகவுடன் உள்ள உறவை மேலும்கட்டியெழுப்பி நட்போடு பயணிப்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் ஜீவன் தொண்டமான் கூறியுள்ளார்.

# 29 பேருக்கு கொரோனா தொற்று;
## நோர்வூட் இன்ஜெஸ்ட்ரி பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது

(க.கிஷாந்தன்)



நோர்வூட் இன்ஜஸ்ட்ரி கிராம அலுவலகர் காரியாலயத்திற்கு உட்பட்ட தோட்ட பகுதிகள் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

நோர்வூட் ஹொன்சி பகுதி, இன்ஜஸ்ட்ரி, பாத்போட் பிரிவு, பிரட், பிலின்கிபோனி மற்றும் அபகனி, ஆகிய பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி புளியாவத்தை பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையில் ஒன்றில் 180 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர் பரிசோதனைக்கு அமையவே இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி இன்ஜஸ்ட்ரி தோட்டத்தில் 19 பேருக்கும், என்பீல்ட் தோட்டத்தில் 5 பேருக்கும் போடைஸ் தோட்டத்தில் 5 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த பகுதிக்குள் உட் பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமுலாகியுள்ள பயணத்தடை மீள் அறிவிக்கும் வரை அமுலில் இருக்கும் என பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுமார் 29 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# கொழும்பு துறைமுக நகர சட்ட மூலத்தை அனுமதிக்க முடியாது




(கதிரவன்)

கொழும்பு துறைமுக நகரம் சட்ட மூலத்தை நாம் அனுமதிக்க முடியாது என திருகோணமலை கிழக்கின் குரல் அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற சந்திப்பின்போது இக் கருத்தினை அவர் வெளியிட்டார்.

covid19 தொடரின் மூன்றாவது அலை தொடர்பான நிலைப்பாடுகள் பற்றி செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அருண் ஹேமச்சந்திரா தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான சிகிச்சை வசதிகள் போதுமானதாக இல்லாது இருப்பதாகவும் பல இடங்களில் அனுமதிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளானவர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் 1 மாத காலம் கடந்த பின்னரே வழங்கப்படுகின்றது.

அன்றாடம் கூலித் தொழில் செய்து வருமானத்தை பெற்றுக் கொள்பவர்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராம அதிகாரிகள் பிரிவு முடக்கப்பட்டுள்ளது. இங்கு 7084 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 768 தனி நபர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கொழும்பு துறைமுகம் பற்றி வினா தொடுத்தபோது இலங்கை அரசாங்கம் இரண்டு மூன்று நாட்கள் பாராளுமன்றத்தில் ஆராயப்படுகின்றன சட்டம் மூலமான கொழும்பு துறைமுகம் சிட்டி சட்டமூலம் ஒரு நாளில் நிறைவேற்ற ப்பட்டமையை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410240
Fax : 044 2410245

# இயற்கை மற்றும் சமூகத்திற்கு புத்துயிர் அளிக்க 'ஹரித்த சவிய' திட்டம் ஆரம்பம்

(கதிரவன்)



மனித மக்கள் தொகையின் தடயங்கள் 35,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும், வரலாற்று கண்டுபிடிப்புகளின் படி இலங்கை அந்த வரலாற்றின் ஒரு முக்கியமான பகுதி என்றும் கருதப்படுகின்றது. நம் வாழ்வின் ஒரு அங்கமாக மரங்களும் இயற்கையும் இருந்தன, ஆனால் அபிவிருத்தியின் காரணமாக பல மரங்களும் தாவரங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. நமது வருங்கால சந்ததியினருக்கான இயற்கை வளங்களை பாதுகாக்க நாங்கள் ஒருமனதாக பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நிலையை உணர்ந்த குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா, அவர்களின் சமூகப் பொறுப்புக் கடமைகளின் ஒரு பகுதியாக அண்மையில் திம்பிரிகஸ்யாய மற்றும் கொழும்பு நகராட்சி மன்ற அதிகார வரம்பின் பல பகுதிகளில் ஹரித்த சவிய என்ற கருப்பொருளில் மரம் நடும் நிகழ்வுகளை நடத்தியது. இந்த நிகழ்ச்சிகள் ஹல்ஃப்ஸ்டார்ஃப் சமூக திருத்த அலுவலகம் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்துடன் கூட்டாக நடத்தப்பட்டன. இந்த குழு திட்டங்கள் அபிவிருத்தி அலுவலர் (சமூக திருத்தங்கள்) திரு. சஞ்சீவ வன்னியாரச்சியின் ஒருங்கிணைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டன.

இத்திட்டத்தின் முதல் கட்டம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அன்று நாகஸ்வத்த குழந்தைகள் மேம்பாட்டு மைய வளாகத்தில் தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இரண்டாம் கட்டம் மார்ச் மாதம் 16 ஆம் திகதி அன்று பொரெல்லயில் அமைந்துள்ள பேராயர் கார்டினல் மால்கம் ரஞ்சித்தின் உத்தியோகபூர்வ இல்லமான பேராயர் இல்லத்தில் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியின் மூன்றாம் கட்டம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி அன்று ஏழு வளாகங்களில் நடைபெற்றது, இது கொழும்பு நகராட்சி மன்ற விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் துறையின் பார்வையில் இருக்கும் கிருலபன சித்துமின்ன மண்டபத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா தொடர்ச்சியாக பல திட்டங்களுடன் பங்களிப்புச் செய்துள்ளது. இந்த முயற்சி இயற்கைக்கும் சமூகத்திற்கும் மீளளிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட பல திட்டங்களின் ஒரு பகுதியாகும், எதிர்காலத்திலும் இவ்வாறான திட்டங்களை தொடரும்.

# தோட்ட அதிகாரிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொகவந்தலாவ தோட்ட தொழிலாளர்கள் போராட்டம்

(க.கிஷாந்தன்)



பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ தோட்ட தொழிலாளர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

1000 ரூபா கிடைத்ததில் இருந்து மேலதிக கொடுப்பனவு கிடைப்பதில்லை எனவும், வேலை நாட்கள் குறைக்கப்படுவதாகவும், தோட்ட அதிகாரிக்கு எதிர்ப்பு தெரிவித்துமே தொழிலாளர்கள் பொகவந்தலாவ அட்டன் பிரதான வீதியில் இருமருங்களிலும் நின்று இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கொரோனா வைரஸ் காரணமாக சமூக இடைவெளியோடு பதாதைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலயம் நடைபெற்றது.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

தேனீருக்கு 5 நிமிடத்தை கூடுதலாக எடுத்தால் கூட கடுமையாக எசுகின்றனர். காலையில் இருந்து இரவு வரை வேலை வாங்குவார்கள். எந்த பயனும் இல்லை. எனவே தோட்ட அதிகாரி வேண்டாம்.

கிழமையில் மூன்று நாள் வேலை தருவதாக சொல்லி இரண்டு நாளே வேலை தருகின்றனர். கேட்கப் போன இளைஞர்களையும் பொலிஸில் நிறுத்தியுள்ளனர். அதற்கான நியாயம் வேண்டும்.

20 கிலோ கொழுந்தை பறிக்குமாறு கேட்கின்றனர். அப்படி பறிக்க முடியாது. 13 நாள் வேலை கூட இந்த மாதம் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபா கொடுத்ததில் பிரயோசனம் இல்லை.

1000 ரூபா வழங்கப்பட்டதில் இருந்து 20 கிலோவை எடுத்தால் மாத்திரமே பெயர் என தோட்ட நிர்வாகம் கூறுகின்றது. கிழமையில் 3 நாள் வேலை மாத்திரமே வழங்கப்படுகின்றது. கேட்டதால் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆகவே இந்த முகாமையாளர் தேவையில்லை என கருத்து தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகக்கவசம் அணியாத பொதுமக்களுக்கு வீதியில் வைத்தே அண்டிஜன் பரிசோதனை




(பாறுக் ஷிஹான்)

நாட்டை மீண்டும் அச்சுறுத்த ஆரம்பித்திருக்கும் கொவிட்-19 மூன்றாம் அலையிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு கல்முனை வடக்கு கல்முனை தெற்கு நிந்தவூர் சம்மாந்துறை நாவிதன்வெளி அக்கரைப்பற்று உள்ளிட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதார வைத்திய அதிகாரிகளின் தலைமையில் குறித்த பிரதேசத்தில் முகக்கவசம் அணியாதவர்களுக்கும் சீராக முகக்கவசத்தை அணியாமல் வருபவர்களையும் இடைமறித்து அவர்களுக்கு எதிராக ஒவ்வொரு நாளும் அன்டீஜன் பரீசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைக்கு மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிசார் பாதுகாப்பு படையினர் இணைந்து சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதோர் மீது நடவடிக்கையை மேற்கொண்டனர் .இதில் முகக்கவசம் அணியதவர்களுக்கு எதிராக உடன் கோவிட் 19 தொற்று பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

இதே வேளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஆகியோரின் கண்காணிப்பில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.நிஸ்தாரின் நெறிப்படுத்திலில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம்.பைசால் தலைமையிலான குழு சாய்ந்தமருது பிரதேசத்தில் கொவிட்-19 யினை கட்டுப்படுத்துமுகமாக பொது இடங்களுக்கு திடீர் விஜயம் இரவு 09.30 மணிவரை மேற்கொண்டனர்.

இந்த கள விஜயத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், பல்நோக்கு அபிவிருத்தி செயலனி திணைக்களத்தின் பயிலுநர்களும் கலந்து கொண்டனர்

வெசாக் மற்றும் நோன்பு பெருநாள் பண்டிகை காலம் என்பதனால் மக்கள் புத்தாடைகள் மற்றும் பண்டிகை கால கொள்வனவில் சாய்ந்தமருது வர்த்தக நிலையங்களில் பரபரப்பாக இயங்கிவருவதனால் சாய்ந்தமருது- மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு சுகாதார விழிப்புணர்வும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகிறது.

# மின்வெட்டு நேரம் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறும் என, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (04) நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில், திராய்க்கேணி, அம்பாறை பிரதான வீதி, ஹிஜ்ரா சந்தி, தைக்கா பள்ளி, கல்முனை பிரதான வீதி, வீரமுனை, பழைய சந்தைப் பகுதி, சொறிக்கல்முனை, வீரைச்சோலை மற்றும் நகர்ப்பள்ளி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை (06) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்கலாவடி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

செவ்வாய்கிழமை (11) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட திராய்க்கேணி பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

செவ்வாய்க்கிழமை (18) சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஜே புளக் யீஸ்ட், வெஸ்ட், கல்லரைச்சல், காட்டுப்பள்ளி, கைகாட்டிபகுதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

புதன்கிழமை (19) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட சின்னப்பாலமுனை, கோணவத்தை, நிந்தவூர் முஸ்தபா புரம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# அறநெறிப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை பூட்டு!

## இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் உமாமகேஸ்வரன்

(வி.ரி.சகாதேவராஜா)



கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் உள்ள அனைத்து அறநெறிப் பாடசாலை நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் இதனை அறிவித்துள்ளார்.

கொரொனா வைரஸ் தொற்றுத் தாக்கத்தின் மீளெழுச்சி இலங்கையின் பல மாவட்டங்களில் அதிகரித்துக் காணப்படுவதால் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கற்றல் சார் நடவடிக்கைகளை மறு அறிவித்தல் வரும்வரை மேற்கொள்ள வேண்டாமென இந்து சமய அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினரிற்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவுறுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி (02) ஞாயிற்றுக்கிழமை நாட்டில எந்தவொரு அறநெறிப்படசாலையும் நடக்கவில்லை.

# தமிழ் முஸ்லிம் உறவை சாணக்கியன் எம்.பி. சீரழிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது!

## கல்முனை மாநகர பிரதி முதல்வர்

(நூருல் ஹுதா உமர்)



பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அவர்கள் தமிழ் முஸ்லிம் உறவை சங்கடப்படுத்தி சகோதரத்துவத்தை சீரழிப்பது போன்று பொய்யான நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி வருகிறார். இப்படியான ஒரு அநியாயமிக்க காரணியாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அவர்கள் இருக்கக்கூடாது. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. எல்லா சமூகத்தினதும் வாக்குமூலங்கள் பெறப்பட்டு யாருக்கும் அநீதி இடம்பெறாத வகையில் கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் தீர்க்கப்படும் என கல்முனை மாநகர பிரதிமுதல்வரும், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் பிரத்யோக இணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்கு முகமாக கல்முனை கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

வெளிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினையின் அளவு தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எமது பிரச்சினையை இங்கு இருக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளும் அமர்ந்து பேசி தீர்வை பெறலாம் என்பதை உறுதியாக நம்புகிறேன். தமிழருக்கும் முஸ்லிங்களுக்குமான உறவு காலாகாலமாக நீடித்து வருவது. தலைவர் அஸ்ரபுக்கும் தமிழ் கூட்டமைப்புக்கும் நெருங்கிய உறவு இருந்தது. எமது பிரச்சினைகளை தீர்க்க இனரீதியாக, அரசியல் ரீதியாக சிந்திக்காமல் நியாயபூர்வமாக சிந்திக்க வேண்டும். கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஹென்றி மஹேந்திரன் மக்கள் அங்கீகாரம் பெற்ற ஆளுமையான ஒருவர். அவர் கல்முனை விடயத்தில் மு.கா பிரதித்தலைவர் ஹரீஸ் எம்.பியை தொடர்புபடுத்தி பேசுவதை விடுத்து நியாயத்தை சிந்திக்க வேண்டும். எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு நிர்வாகத்தை சரியாக வகைப்படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை.

தமிழ் பேசும் மக்களாக ஒன்றாக பயணித்து நாம் பிட்டும் தேங்காய் பூவும் போன்று வாழ்ந்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். நடைபெறப்போகும் (04.05.2021) கூட்டத்தில் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம், மு.கா பிரதித்தலைவர் ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு இது தொடர்பில் பேசுவார்கள். யாருக்கும் அநியாயம் நடக்க கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம். இந்த விடயத்தில் வெளி சக்திகளே கல்முனை தமிழ் மக்களை குழப்பிக்கொண்டிருக்கிறது என்றார். இந்த ஊடக சந்திப்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.எம். பைரூஸ், ஏ.ஏ அமீர், ஏ.சி.ஏ.சத்தார், எம்.எஸ்.எம். நிஸார், ஏ.எம். நவாஸ் ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் 09 கிராமங்கள் – முழுமையாக முடக்கம் –



(வடமலை ராஜ்குமார்)

திருகோணமலையில் அதிகரித்து வருகின்ற கொரொனா தொற்றின் காரணமாக இது வரை 09 கிராமங்கள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது.

இன்னும் பல கிராமங்களில் உள்ள மக்களிடம் அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றது.

தற்போது ஏற்பட்ட 3ம் அலையில் இது வரை திருகோணமலை மாவட்டத்தில் 523 பேர் தொற்றுக்கு உள்ளாகியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

கடந்த 30 திகதி கந்தசாமி கோயில் பகுதியில் ஒரு கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

கடந்த திகதி முதலாவதாக முடக்கப்பட்ட பூம்புகார் கிராமத்தை தொடர்ந்து அதனுடன் தரைவழித் தொடர்புடைய கோவிலடி கிராம சேவகர் பிரிவு மற்றும் மடகோ கிராம சேவகர் பிரிவு மற்றும் இலிங்க நகர் கிராம சேவகர் பிரிவு ஆகியன உள்ளடங்களாக 07க்கும் மேற்பட்ட கிராமங்கள் முடக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மே 1ம் திகதி மாலையில் இருந்து அன்புவழிபுரம் கிராம சேவகர் பிரிவு மற்றும் உவர்மலை கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகள் இன்னும் சிக்கலுக்கு உள்ளாகாமல் சுகாதார திணைக்களமும் காவல்துறை மற்றும் இராணுவத்தினர் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org